தமிழர் சிறப்பு.

முதற்பகுதி.

ஸ்ரீமான் பி. தி. ஸ்ரீநிவாசையங்கார் அவர்கள் M. A. L. T.

எழுதின

தமிழரின் சிறப்பின் சிறப்பு

திரிசிபுரம்

அர்ச் சூசையப்பர் கல்லூரித் தலைமைத்தமிழ்ப்புலவர்

அ. சிவப்பிரகாசர்

எழுதியது

பிஷப்ஹிபர் கல்லூரி ஆங்கில ஆசிரியர் திருவாளர்

M. S. பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள் B. A. L. T.

முன்மொழியோடு

திரிசிரபுரம்

சோலடன் கம்பெனி அழுத்தகத்தில்

பதித்தது

1925.

FOREWORD

Ignorance begets arrogance. Arrogance brags. It insults too. Scholarship in Tamil Language and literature is a *sine qua non* for making Tamil words reveal the past of the Tamil people. Words of one language enter the vocabulary of another as bilinguals for mutual intelligibility, as court terms of rulers, as fashionables and curiosities, as embodiers to hand of thoughts and feelings current, and as enrichers of rising tongues. The theory of bricks and brats is a bric-a-brac, by hook or by crook. It is an art worthy of an acute lawyer to praise the virtues of a living contemporary of fame and renown and to conclude the eulogy by saying that the celebrated personage is the first disciple of the enthusiastic encomiast. This brochure seems intended to disillusionize specious charmers and the unwary public.

TRICHINOPOLY,
16—2—25.

M. S. PURNALINGAM PILL

மேற்கோள்.

ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானும் மாணப் பிறப்பு.

எப்பொரு ளெத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

வினைபகை யென்றிரண்டி னெச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.

கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் தலை.

தமிழ்மறை.

தமிழர்களே !

இவ்வூரில் 'பிரபல ஆசிரியரா'யுள்ள ஸ்ரீமான் பி. தி. ஸ்ரீனிவாசய்யங்கார் அவர்கள் தாம் 'சுதேசமித்திரன்'. பத்திரிகைக்கு எழுதின 'தமிழரின் சிறப்பு' என்னும் கட்டுரைப் பகுதிகளை வேறாக அச்சிட்ட முறையொன்றை எமக்கு அனுப்பினார்கள். அதுபோலவே இன்னும் பலர்க்கும் அனுப்பியிருப்பார்கள். அது தமிழர்கள் 'ஆரியமுறை புகுவதற்கு முன்னிருந்த நிலைமையை' விளக்குவதாம். அது அவர்கள் செய்த 'ஆராய்ச்சி'யின் பயன். அதனை எமக்கும் (பலர்க்கும்) உருக்கத்தோடு அனுப்பினதற்குப் பொருட்டு யாதாக விருக்கலாமென்று தெளிதற்கு, அதனை ஒருமுறை படித்தோம். அதன்மேல் அப்பொருட்டு விளக்கமாயிற்று. நமது நண்பர் தமிழர் பண்டை நிலைமையையும், தமிழ் மொழியின் சிறப்பையும் துருவி நாடி யுண்மைகண்டது போல் உருக்கங் காட்டுவ தெல்லாம் மாய் மால நட்புரிமையே. யாங்ஙன மெனின் கூறுதும்:—

நமது நண்பர் கூறுமாறு:— ஆரியமுறை, அனரிய முறை என்னும் இரண்டும் முறையே ஆரியர்கள், தஸ்யுக்கள் (நிரிந்திரர் தமிழர்கள்) என்னும் இருகூட்டத்தார்க்கு உரியன; ஆரிய முறையாவது—அக்கினியில் ஆகுதிசெய்தல், வேத மந்திரங்களை ஓதுவது, இந்திரன், வாயு முதலிய தேவர்களைத் தனித்தனி யழைத்து ஹோமம் செய்வது, ஆடு முதலிய மிருகங்களை வெட்டி (? வெட்டாமல்) பலி கொடுத்து ஹோமம் செய்து, (பல பகுதிகளை உப்பிடாமல் தின்னுவது), 'பழைய சம்ஸ்கிருத பாஷை'யில் உள்ள வேத மந்திரங்களைக்கற்றல், முதலியன: அனரிய முறையாவது— அக்கினியை மூட்டிப் பூஜைசெய்யாதிருத்தல், இந்திரனைத் தேவர்களின் அதிபதியாய்க் கொண்டாடா திருத்தல், அக்கினியில் ஆகுதிசெய்யாமை, வேத மந்திரங்களை ஓதாமை, ஒவ்வொரு தேவர்க்கும் ஒரு இடத்தில் பூஜை செய்யாமை, ஐயனர், கருப்பன், வீரன் இவர்களுக்குப் பூஜைசெய்தல், பிடாரிக்கும் எல்லையம்மனுக்கும் பலியிடு தல், ஆடு கோழியை வெட்டி தெய்வங்களுக்குக் காட்டிக் கொண்டுபோதல், (உண்பதற்கு), சாந்தஸ பாஷை (பழைய சம்ஸ்கிருத பாஷை) மந்திரங்களை ஒப்புக்கொள்ளாமை, முதலியன. இவ்விருமுறைகளில் எது சிறந்தது, உயர்ந்தது என வெளிப்படையாகக் கூறினரல்லர்.

எனினும், 'இந்தியர் வேடர்நிலை என்ற முதல் நிலையி லிருக்கும் போதே தெய்வங்களுக்குப் பலியிடத் தொடங் கினர். அம்முறை அனரியமுறை. இப்போதும் கீழ்நிலையி லிருக்கும் ஜனங்கள் இவ்விதமாகத் தேவர்களைத் தொழு வதை ஒவ்வொரு கிராமத்திலும் பார்க்கலாம்' என்கிறார். இந்தியர் என்றால் ஆரியரா? தமிழரா? ஆரியரெனின் அவர் அனரிய முறையிலிருப்ப தெவ்விதம்? 'கீழ்நிலை' என்றால் என்ன? கல்வி, செல்வம், அதிகாரத்திலா? சமயக்கொள்கை யிலா? 'ஒவ்வொரு கிராமத்திலும்' என்றால் வடநாட்டிலா? தமிழ்நாட்டிலா? 'ஆரியமுறையை இப்போது பிராமணர் களது வீடுகளிலே விவாகம், சிராத்தம் முதலிய சடங்குகள் நடக்கும்போது காணலாம்' என்றால், ஏனையோர்களிடத்து

அம்முறை இல்லையா? 'இப்போது காணலாம்' என்றால் முன்னே இல்லை என்று கொள்வதா? இங்ஙனம் ஆரியரை யும் தமிழரையும் கூட்டிக் குழப்புவது எதற்காக?

'அக்கினி முகமாய் தேவர்களுக்கு ஆகுதி செய்யும் ஏற்பாடு எங்கே எப்போது உண்டாயிற்று? என்னும் வினவுக்குத் தக்க விடைசொல்ல ஆதாரம் ஒன்றும் காணோம்,' ஆனாலும் 'இம்முறை பரவினது இப்போதைக்கு ஐயாயிர வருஷங்களுக்கு முன்னால் நிகழ்ந்திருக்கலாம்' என்கிறார். எந்த கோடாங்கிக்குறிகேட்டு இங்ஙனங் கூறுவது? 'மனம் போன போக்குக்கோர் வழியொன்றில்லை.'

இன்னும் 'ஆரியர்கள் பல்லாயிரம் வருஷங்களுக்குமுன் இந்தியா மேல் படையெடுத்து வந்து, இந்தியரை ஜயித்து, தங்கள் முறையையும், தங்களது சம்ஸ்கிருத மொழியை யும் இந்தியாவில் பரவச் செய்தாரென்றும் சொல்கிறார்கள். இந்தக் கொள்கைக்கு ஆதாரம் ஒன்றும் காணோம். அக்கினி காரியம் இந்தியாவில் பிறக்காமல் புறநாட்டில் தான் உண்டாயிருக்க வேண்டுமென்பதற்குக் காரண மொன்றுமில்லை'யாம். ஆயினும் இந்தியாவிலேயே இருந்த ஆரியர் (பேரில்லாதவர்) தங்களை ஆரியரென்று கூறிக் கொண்டதற்கும் புதிதாக 'அக்கினி காரிய'த்தை உண்டாக் கிப் பிரித்துக்கொண்டதற்கும் காரணந்தான் என்னையோ? 'ஆரியமுறை (அக்கினிகாரியம்) வடஇந்தியாவைத்தவிர வேறெங்கேயும் உலகத்திலிருந்ததாக அடையாள மொன்று மில்லை'யாம். பைபில் ஆதியாகமத்தில் எபிரேயர் ஆட்டை வெட்டித் தீயிலிட்டுப் பலிகொடுத்தமுறை முழங்குவதைப் படிக்க நேரமில்லையாம். அதனால் இந்த முறை பிறந்து வளர்ந்தது இந்தியாவில் என்று நினைக்கவேண்டியிருக்கிற தாம்.

ஆரியர் (மிலேச்சர்) முறை தீயிலிடுவதும், பழந்தமிழர் முறைமண்ணிலிடுவதும் உண்மையே யாயினும், அவ்வேறு பாட்டுக்குக் காரணம் அவ்விரு திறத்தாரது வாழ்க்கை நிலைமையே யாகும். தமக்கென நிலைக்களமின்றித் திரிந்த ஆரியர் (மிலேச்சர்) இறந்த தம்மவரை சுட்டெரித் தொழி

யாது மண்ணிற் சமாதி வைத்துக் காத்தலியலுமா? தமக்கென நிலைக்களமுடைய தமிழர்க்கே அது சாலும்.

'வேதபாஷை பழைய சம்ஸ்கிருத'மாம். அதற்கொரு பெயருண்டெனினும் அதைக்கூற மறந்து விட்டனரோ? கூறவிருப்பமில்லாது விட்டனரோ? கூறாமைக்குக் காரணம் உய்த்து நோக்குங்கள்-

'பழைய சம்ஸ்கிருதத்துக்குச் சம்பந்தம் அதிகமான பாஷைகள் பாரசீகத்திலும் ஐரோப்பாக் கண்டத்திலும் பரவியிருக்கின்றன. ஆகையால் இவைகளுக்கெல்லாம் தாய்ப்பாஷை ஒன்று இருந்திருக்கவேண்டும்' என்கிறார். புது சம்ஸ்கிருதம் இறந்துபட்ட (பேச்சு வழக்கற்ற)தனால் அதன் தாயாகிய 'பழைய சம்ஸ்கிருத'மும் அதன் தாயாகிய 'தாய்ப்பாஷை'யும் இறந்தொழிந்தன என்பார் போலும். 'பழைய சமஸ்கிருத' மகளைப்பெற்ற புது சம்ஸ்கிருதத்தின் பாட்டி இன்னும் இளங்கன்னியாகவே இருக்கிறாள். அவளைக் காண இவர்க்குக் மனமில்லையோ? அல்லது நாணுகின்றாரோ அறியோம்.

பிராமணர்களது இருக்கிய சிரௌத கிருத்தியங்கள் அப்படி ஒரு கூட்டத்தார் வேறுபிரிந்தபோதுதான் உண்டாயிருக்கவேண்டும்- அதிற் சிறிதும் ஐயமேயில்லை. அந்த கூட்டமெப்போது உண்டாயிற்று என்பதுதான் ஆராய வேண்டுவது.

'புரூரவஸ்' என்னும் சொற்பொருள் யாது? அப்பெயர் பெற்ற ஒருவன் பனிமலை நடுநாட்டிலிருந்து தீமுறையொழுக்கத்தைக் கொணர்ந்த கதை பொய்யன்றென்று நிறுவி, அவன் காலத்தை அறுதியிடாது, 'காட்டுவோம்' என்று பிடிவாதக்கூற்றாய் (Dogmatic assertion)க் கூறுவதில் யாதும் பயனில்லை.

இதுவரை கூறிய வாற்றால், நமது நண்பர் 'தமிழரின் சிறப்புக் கூறினாரா? அன்றேல், ஆரிய பிராமணர்களது தீயொழுக்க முறைச் சிறப்புக் கூறினாரா? உங்கள் மெய்யறிவால் உன்னிக் காணுங்கள்.

இன்னும் கேளுங்கள்:—

'இந்தியாவில் மக்கள் பேசும் மொழிகள் எல்லாவற்றிலும் தமிழ் மிகப்பழைய தென்றும், மிக உயர்நிலை பெற்றதென்றும் எல்லாருக்கும் தெரியும்'. ஆனால் எல்லாருக்கும் தெரியாதொன்றுண்டு. அதுயாது? அது பேச்சு வழக்கில்லாத சம்ஸ்கிருதம் தமிழினும் மிகப்பழையதென்பதும், மிகஉயர்நிலை பெற்றதென்பதும். 'தமிழர்சம்ஸ்கிருத சம்பந்தமொன்று மில்லாமலிருக்கும் போதே தமிழில் செய்யுள்கள் இயற்ற ஆரம்பித்தார்கள்'. அந்தோ இது என்ன ஆச்சரியம்! இன்னும், 'பழைய தமிழ் செய்யுள்களில் வடமொழிச் சொற்கள் மிகக் குறைவாயும், யாப்பு முறை வடமொழி முறை யல்லாமலும் உள்ள சங்கச்செய்யுள் என்பவை இன்னும் அழியாமலிருக்கின்றவற்றைக் காணலாம்.' இந்த உண்மையைக்காண பலநாள் பட்டினி கிடத்தல் வேண்டுமே! சங்கச் செய்யுள் இன்னும் அழியாமலிருப்பதற்கு பெரிதும் வருந்துகின்றார் போலும். ஆரியரும், ஆரியமும் இத்துணை சூழ்ச்சிசெய்தும் ஏனைத் திராவிட மொழிகளைப் போலத் தலைசிதைந்தழியாமல் நிலைத்திருக்கின்றதே என்று மனமழிகின்றார் போலும்! ஆயினும் ஒரு உண்மைகண்டு விட்டனர்! அது யாது? இறும்பூதினும் இறும்பூது!! 'ஆகையால், தென்னிந்தியாவிற்கு வடமொழி வருமுன் தமிழ் மொழி உயர்நிலை உற்றிருந்த தென்பதற்குத் தடையேயில்லை'. தடை கூறினவன் எந்தப் பாவி மகனோ! 'அப்போது (வடமொழி தென்னிந்தியாவிற்கு வரும்போது) தமிழரும் நாகரீக முற்றிருந்திருக்க வேண்டு'மாம். 'அப்போது' என்றால் எப்போது? இதுவரையில் 'சமஸ்கிருத'மென்றவர் இங்கே 'வடமொழி' என்றார். ஏனோபெயரை மாற்றிக் கொண்டனர்? 'வடமொழி வருமுன்' என்றால், வடமொழி எத்திசையில், எவ்வூரில், எந்நாட்டில் இருந்து வந்தது? ஒருக்கால் வடமொழி என்றால் வடக்குமொழி என்று பொருள்கொண்டு வடதிசையிலிருந்துவந்த தென்பார் போலும்! தானே வந்ததா? கொண்டுவந்தாரெவர்! ஆரிய (மிலேச்ச) ரா? பிராமணரா? என்கொண்டுவந்தார்? கொண்டு வந்தாலும் மிலேச்சரது மொழியை, தமது சமயத்துக்கு

மாறுபட்டோரது மொழியை 'நாகரீகமுற்றிருந்த' தமிழர் ஏற்றுக்கொள்வாரா? தமது 'உயர்நிலைபுற்றிருந்த' தமிழ் மொழியோடு கலந்து கொள்வாரா? பகுத்தறியும் மெய்யறிவுடைய தமிழர்களே கூர்ந்து பாருங்கள்.

இவையெலாம் 'தமிழரின் சிறப்பு'க் கூறியவாறோ? ஆரிய (வட) மொழியின் சிறப்புக் கூறியவாறோ? விடை கூறிக்கொள்ளுங்கள்.

'இந்நிலையை (தமிழ்மொழியுயர் நிலையை) கண்டு பிடித்துச்' சொல்ல ஒரு வழியுண்டாம். அது தனித்தமிழ்ச் சொற்களை யாராய்ச்சி செய்வதாம். அந்த ஆராய்ச்சிப் பெருமிதத்தை இறுதியிற் கூறுவான் விடுத்து, பொதுவே மொழிவரலாற்றுமுறையும், சிறப்பாகத் தமிழ்மொழி வளர்ந்த முறையும், ஆரிய மொழி பிறந்து வழங்கிய முறையும், தமிழர் மேம்பாட்டு நிலையும், மெய்யறிவாற் சிறந்த நம் முன்னோராகிய தமிழர் 'தமிழ்விடுதூது' என்னும் செய்யுளில் ஆராய்ந்தவாறு கூறுகின்றோம்.

" இயற்கை செயற்கையே
இன்பாருங் கற்பனையே என்னுமூ—வன்பாலா

முன்னற் றிருமேனி யென்பர் உதுவிரிக்கின்
முன்ன ரியற்கை மொழியென்றல்—தன்னை

ஒருவ ரியற்று துயர் படைப்பு நாளான்
வருமக்கள் எப்பொருட்கும் வாய்ப்பா—டுருப்படுத்துத்

தந்நிலத்துத் தொன்றுதொட்டுத் தானே பெருவழக்காப்
பன்னிலப்பாட் டும்மியலும் பண்சுவையும்—இன்னவெழின்

மன்னியெவ் வாற்றும் வடுவிகந்த தென்பாது
கன்னித் தமிழேயோ காரணியே!—உன்னரிய

முன்னை உருவாகக் கொண்டமையான் முன்னியதை
அன்னைதமிழணங் கென்றூரறிஞர்—இன்ன

இயற்கைமொழி யீற்று மிடையுந் தலையும்
மயக்கவெழுத் தும்உறுப்பும் மாட்டிப்—பயப்படவே

வேறுசில சொல்லும் விளைவித்து மல்குவித்துக்
கூறுபடு தங்குழூவிற் குள்வழங்கி—வீறியொரு

நாட்டில் வழங்கியந்த நாட்டுச்சொல் லாகுந்து
காட்டுகுட கந்தெலுங்கங் கன்னடம்முன்—ஈட்டு

துளுவ முதலியன வென்பால் நூக்கின்
அளவியுன் போலியுரு வாமல்—வளமிகுந்த

கற்பனையா தென்னிலியற் கைசெயர்கைச் சொற்களிலே
பொற்புடைய சொற்கள் பலபொறுக்கிக்—கற்பிதமாப்

பின்முன் உறுப்பெழுத்தைச் சேர்த்துப் பிறழ்ந்திசைப்ப
மன்வே றொருவியெழுத்தால் மாற்றியே—முன்னியற்கைப்

பான்மொழியி லுள்ள வியல்முதல் பற்றுபோல்
மேன்மொழியச் சில்லவியல் வேய்ந்துகொடு—நூன்மொழியாத்

தெய்வம் பொருட்டாகச் செய்யுள் வழக்காக
உய்யும் பலதேயர் ஓர்தெய்வங்—கைவந்த

துய்ய நெறி யொன்றைத் தொடர்தலா லேகொண்ட
ஐய ஒருகோள் அறைபொருளை—எய்யாதே

பல்வே றியற்கை மொழியாற் பயிற்றுதலும்
மல்குவித்த லும்அரிதாம் மற்றும்பல்—சொல்வழங்கு

மக்கட் கிடையில் ஒருமை வளராது
பொக்கமாம் வாழ்க்கைப் பொலிவென்று—தொக்கனராப்

பன்மொழியர் ஓர்நெறியர் பல்தேயர் பார்த்தலைவர்
மன்னி ஒருநிலத்து வாய்ப்பச்சூழ்ந்—தன்ன

படியாக்கிக்கொண்டு பதிமொழியென் றூரால்
வடிவா ரிறைவியே! மற்றக்—கடிமொழிதான்

ஆதியிலே போதி யடியிருந்த வாமனார்
நிதி நெறியருளின் நின்றளிக்க—மேதினியில்

எங்கும் பரந்தெண் ணிடவே றிடனின்றித்
தங்கும் பலமொழிமாந் தர்தொடர்ந்தே—துங்க

உலகமூ லம்மொழியென் றொன்றும் பொருளால்
இலகுமொழி பாலியா மென்பர்—கலையணங்கே!

இந்தக் கலையுனக்கே ஏற்ற மணிக்கலையாய்
முந்தைப் புவியனைத்தும் மூடியின்றும்—உய்ந்துளதால்

இன்ன மொழியையே இந்நெறியைப் பற்றினோர்
அன்னைமொழியாஇறைவர் ஆக்கினார் — தன்னதனில்

தோற்றிப் பலசொல் உலகில் துவன்றினவால்
வீற்றுவீற் றென்ன விளம்புவரால் — கூற்றிசைக்கும்

அன்னர் இயற்கை செயற்கை நலன் அறியார்
பின்னும் குழவிப் பெருவழக்கை — உன்னியிரார்

பின்னை இணர்ப்பூம் பெரும்பிண் டியின்நீழல்
மன்னி அறமுறைத்த வாமனார் — சொன்னவுயர்

ஆருகதம் பற்றியே முற்கோள் நெறிபிழைத்த
ஆருகதர் எவ்வுலகும் ஆயினபின் — ஒருகின்ற

தங்கள் நெறிக்கோர் மொழியைத் தரக்கருதித்
துங்கத் தமிழில்பல் சொல்திரட்டி — அங்குரைத்த

பாலி மொழியினினும் பல்ல பகிர்ந்துகொடு
பாலியலும் கங்கைசிந்து பாய்ந்துவளம் — கோலியநாட்

டக்கால் வழக்கால்அலர்ந்த செயற்கைமொழிப்
பக்கலிலே பல்சொல் பயந்துகொடு — தொக்கிருக்கும்

பல்ல சுவைக்குழம்பு போல நிலம்பரந்த
பல்ல மொழியின் பயன் என்றும் — நல்ல

அமைக்கையாய்ச் செய்த தெனவும் பொருளாச்
சமக்கிருத மென்றும்பேர் தாமிட் — டமைப்பின்றிக்

கீர்வாணமென்றும் கிளர் ஆரியம் என்றும்
பேர்வாரி செய்தெங்கும் பேசினார் — நீர்வாரி

சேர்ந்தவட மேற்கில் இதுபோலும் சீர்ஒருசொல்
ஆர்ந்ததெனச் சொல்வோரும் ஆங்குளரே — நேர்ந்தவ்

வடமொழியே யுன்றன் மணிமே கலையாய்
இடமார்ந் திலங்குவதால் இன்றும் — அடலார்ந்த

தென்றமிழி னோடு இதனைச் சேர்த்துன் திருமுகத்தில்
ஒன்றிரண்டு கண்ணும் எனவுரைத்து — நன்றமைந்த

கன்னித் தமிழைமுன்னங் கைக்கொண்டு போற்றியாங்கு
இன்ன வடமொழிக்கும் எண்இயலும் — சொல்நிகண்டும்

பண்ணும் பஞ்சாதியும் பாட்டும் நிருத்தமும்ஆம்
எண்ணில் பலநூல் இயற்றினர்—மண்ணுயிரைக்

கொல்லா விரத முனிவர் குழாம்அந்நூல்
எல்லாம் வழங்குவன இன்றுமாம்—நல்லாயே!

முக்கண் இறைவர் அளித்த முதுநெறியும்
செக்கமலக் கண்ணரிதான் செய்நெறியும்—தொக்க

இருக்கசுரம் சாமம் எனுமறைமூன் றும்பின்
விரித்த அதருவமும் வேறும்—விரித்தஅவற்

றங்கமா றும்மிருதி யாயினவு மேயன்றித்
துங்கபுராணத் தொகையனைத்தும்—மங்காப்

பதினான்கு வித்தையும் பாலமைபல் நூலும்
விதியா வெழுதி விரித்துப்—பதிமொழியென்

றன்றே பெருமைபா ராட்டுவார் அவ்வடசொல்
உன்றே சுடற்றமிழை யொக்குமோ—நன்றே

மிகைக்குற்றம் மல்கி விதிவரம்பும் இன்றி
வகைக்குற்றம் ஆர்ந்த வடசொல்—நகைக்குற்ற

கோலப் புனையாடை என்றுசிலர் கூறினும்என்
சாலுமோஒப்பில் சழக்காடை—வாலுடம்பை?"

மேற்கூறிய தொடரால், தமிழ் இயற்கை முதன்மொழி என்பதும், மக்கட்கு அறிவு தோன்றிய காலமே அது தோன்றிய காலமென்பதும், அது நிறைந்து இலக்கண வரம்பு பெற்ற காலம் இதுவென்று துணிதற்குப் போதிய கருவிகள் கிடையாவென்பதும், தமிழ் ஐயாயிரம் யாண்டுகளுக்கு முன்னரே சிறந்திருந்ததென்று நமது நண்பர் துணிந்து கூறுவது ஒப்பத்தகாதது என்பதும், அது ஐயாயிரமோ இருபத்தையாயிரமோ துணிதற்கில்லை என்று உண்மை கூறுவதே சிறப்பாமென்பதும், தெளிவாக விளங்கும்.

அன்றியும், 'குதிரை இராவுத்தரைக் கீழே தள்ளினது மன்றிக் குழியும் பறித்தது' என்பதுபோல, நமது நண்பர், நேற்று கணக்காயர் குழுவின் யாண்டு முடிவுக் கூட்டவிழா

(Teachers' guild annual meeting) நிகழ்த்தினபோது, "இலத்தீன், முதலாகிய வடமேற்குப் பேச்சு வழக்கற்ற மொழிகள் ஈனர் பேச்சு மொழிகளாக (Vernaculars) இருந்த காலத்திலேயே தமிழ் சிறந்த நிலையிலிருந்தது. ஆயினும் சம்ஸ்கிருதமொழி அதற்குமுன் பதினையாயிரம் யாண்டுகளுக்கு முன்னரே சிறப்புப் பெற்றுவிட்டது" என்று கூசாது முழங்கி மகிழ்ந்தனர். மொழியியற்கை முறையை நுணுகி உணர்ந்த யுண்மைத்தமிழர் கூறியவாற்றால் இயற்கைமொழி பயிலும் தமிழரும், செயற்கை மொழிகளைப் பயிலும் பிறநாட்டவரும், பொதுமொழியினது இன்றியமையாமையை யுணர்ந்து, மதமொழியாகச் செய்யுள் வழக்கிற்குச் செய்துகொண்ட ஆரியம்,சமஸ்கிருதம், வடமொழி, தமிழ்சிறக்குமுன் சிறந்திருப்ப தெவ்விதம்! 'தாய் தாலிப் பிச்சை கேட்கிறாள்; மகள் தங்கத்தால் தாலி தொங்கத் தொங்கக் கட்டுகிறாள்!' என்னும் முதுமொழிக்கும் நமது நண்பர் புதுமொழிக்கும் வேற்றுமைஉண்டோ? ஆரியர் வேற்று நாட்டினரல்லராம். ஆரியர், இந்திய நாட்டினராம். ஆயினும் தமிழரினும் முற்பட்ட சிறப்பினராம். அங்ஙனமாயின், ஆரியர் இந்நாட்டில் எப்பகுதியினர்? ஆரியம் எப்பகுதியினது? ஆரியமும் ஆரியரும் நமது நண்பர்உத்தேசப் (Imagination) பகுதியினவே! எனெனில், மேம்பட்ட ஒழுக்கமுடையஆரியர் மேம்பட்டசிறப்புடைய தங்கள் மொழியை மறவார்; மேம்பட்டவளமுடைய தங்கட்குரிய நாட்டையும் கைவிடார்!

ஆரியமும், பாலியும், பிராகிருதமும், நமது நண்பர் கூறும் 'பழைய சம்ஸ்கிருத'மும் ஒன்றே. ஆரியத்துக்கும், (புதிய) சம்ஸ்கிருதத்துக்கும், வடமொழிக்கும், பண்டைத் தமிழ்ச்சொற்கள் உடம்பும், செயற்கை மொழிச் சொற்கள் கற்பனை காரணச்சொற்கள் உடையும் ஆகும். வடமொழியில் வந்து வழங்கும் தமிழ்ச் சொற்களின் திரிபுகளை நீக்கிவிடின், வடமொழியுடம்பு மறைந்துபோம். உடைகள் மாத்திரம் எஞ்சும்

பண்டைத் தமிழில் சங்கச்செய்யுள், குறள் முதலிய்

வற்றில், சிறுபான்மை வடமொழிச்சொற்கள் என்று வடமொழியபிமானிகள் கூறும்சொற்களே வடமொழிக்கு உடம்பாயுள்ளன. அவையொழிந்த 'பிற்காலத்துத் தமிழ் நூல்களில் பெரும்பான்மையாய் வழங்குவன' என்று அவர் கூறும் செயற்கைமொழிச்சொற்களெல்லாம் அவ்வடமொழியின் உடை அணிகளாயுள்ளன. ஆதலின் வடமொழியிலுள்ள தமிழ்த்திரிபுச் சொற்களையும், பிறசெயற்கை மொழிச் சொற்களையும் அவ்வம்மொழிக்குரியார் வற்புறுத்திப் பிடுங்கிக்கொள்வாராயின், வடமொழியெங்கே! சிவ சிதம்பரமே!!

மேற்கூறியவாற்றால் வடமொழி (சம்ஸ்கிருதம்) உருவற்ற ஆரியர்களுடையதன்று; நம்மவர்களுடையதே என்பது மெய்யறிவுடைய தமிழர்களது கொள்கையாகும். இப்பொது மொழிக்கு பாலி, ஆரியம், ப்ரக்ருதம், சம்ஸ்கிருதம், வடமொழி என்னும் பெயர்களுக்குப் பொருள் கூறுகின்றோம்.

பாலி தமிழ்ச்சொல். பால் இ. வெண்மையுடையது. தூய்மையுடையது. பாலி. பால்--இ பக்கத்துள்ளது. தமிழ்மொழியோடு சார்ந்தது- பாலி--சாரமாய் (சக்கையில்லாததாய்) பால்போல் அறிவுடம்பை வளர்ப்பது.

ஆரியம் தமிழ்மொழிச்சொல். ஆர்ய அதன் திரிபு பாலிமொழி. ஆர்+இயம் நிறைந்த ஓசை. ஆர் ஆர்தல் பொருந்துதல், நிறைதல். இயம்-இனியஓசை. ஆரியம் இனியஓசை நிறைந்த செய்யுள். நிறைந்தஓசையோடு இறைவனை வாழ்த்தற்குரிய செய்யுளுக்குரிய மொழி. ப்ரக்ருதம், சமஸ்கிருதச்சொல். தமிழ்ச்சொற்களை ஒலி உருவஞ் சிதைத்தற்குப் பல விரகு முறைகளில் ரகரத்தை மொழி முதல் இடைகடை மூன்றிடத்தும் சேர்த்தல் ஒருமுறை. அது வடமொழியில் ஒரு (உயிர்ப்பு) உயிர் எழுத்தாகும். அது தமிழனை மகமதியனுக்குதற்குத் தலையை முண்டித்துத் தாடியை வளர்த்து இடையில் லுங்கியும் காலில் சடாவும் புனைவது போலும். எதுபோலவெனின்:—

பகுதி—பகுஎன்னும் முளைச்சொல் திரிகுதி பெற்றது-

தொகுதி அமைதி- கலாதி- சமாதி என்பனபோல- தமிழ்ச் சொல். இச்சொல்லில் பகரத்தின் இடையும் குகரத்தின் இடையும் ரகரவுயிர்ப்பொலி சேர்ப்பின் வடமொழிச் சொல் லாகிவிடும், ப்ர் அக்ர் உதி ப்ரக்ருதி-இதுவடசொல்-பகுதி வட மொழித்திரிபு என்பர்!

இதுபோல ப்ரக்ருதம் என்ற சொல்லில் உள்ள ரகரங்களை நீக்கினால் பகுதம் ஆகும்- பகுதம் எனினும் பகுதி எனினும் ஒன்றே- முன்னே தோன்றினது என்பது. எதன் முன்னே எனின் சமஸ்கிருதம் தோன்றுமுன் என்க. சம்ஸ்கிருதம் தோன்றியபின் அதனிடத்துப் பற்றுடையோர் பாலியை ப்ரக்ருதம் என்றார் என்பது கண்டுகொள்க.

வடமொழி 'வடசொல்' என்றொருசொல் தமிழிலக் கணங்களிற் காணும். அச்சொல்லைப் பற்றி திருவாளர் பா. வே. மாணிக்கம் நாயக்கரவர்கள் கூறுவது இது:—

"வடசொல் ஆரியம், சமஸ்கிருதம் என்பன ஒரு பொருட் கிளவிகளாக அணித்தல் வழங்கி வருவது அறிவேன். ஆனால், தொல்காப்பிய காலத்தில் 'வடசொல்' தவிர மற்ற இரண்டு சொற்களும் உலகில் எங்கேனும் இருந்தனவா? இருப்பின் தமிழ்கூறு நல்லுலகத்தில் வழங்கினவா? வழங்கின் மூன்று சொற்களும் ஒரு பொருளளவாக வழங்கினவா? என்பன இனியும் ஆராய்ந்து தெளிதற் குரியன.

"தமிழில் வழங்கிய சொல்வகைகள் நான்கினுள் இயற்சொல் முதன்மையானது: வடசொல் கடைப்படி யிலுள்ளது. வடசொல் என்பது தமிழ்க்குரிய சொல் லென்று நேராகவே பொருள் கொள்ள இடங் கொடுப்பது. உய்த்துப்பொருள் கோடல் வேண்டாதது.

"அத்தகைய 'வடசொல்' என்னும் தமிழ்ச்சொல்தான் என்னை? என்கிற ஆராய்ச்சிக்குத் தொல்காப்பியத்துணின் றே ஆரியச்சொல்தான் அல்லது சம்ஸ்க்ருதந்தானென்று தெரிவிக்கக்கூடிய கூற்று எனக் கெட்டியவரையில்கிடைக்க வில்லை.

"வடசொல் என்பதை வடக்குத் திசையிலிருந்து வந்தசொல், என்று பொருள் கோடல் எளிதாயினும், அளவைக்கிணங்கநோக்கின், வடசொல் என்பது திசைச் சொல் என்பதனுள் ஒரு பகுதியாக அடங்கும். அவ்வாறாக திசைச்சொல்என்பதனையும் சொல்லி, வடசொல் என்பதனை யும் சொல்லவேண்டிய பொருட்டு விளங்கவில்லை. வட சொல் என்பதைத் திசைப்பொருளில் வழங்கியிருத்தல் பொருந்தாததாகத் தோன்றுகிறது. தொல்காப்பிய காலத் தில் 'வடக்கு' என்னும் சொல்லை எவ்வெப்பொருளில் வழங் கியதென்பது காட்ட நமக்கு நிகண்டுமில்லை, அகராதியு மில்லை.

"வடக்கிருத்தல் என்னும் சொற்றொடரொன்று பிற் றை நூல்களிற் காணப்படுகின்றது. அத்தொடரிலேனும் வடக்கென்பது திசையைக் குறிக்காது, ஊண் துறந்திருத் தலைக் குறிக்கின்றது. அவ்வாறே 'வடசொல்' என்பதிலும் வடஎன்பது துறவைக்குறிக்குமேல், 'வடசொல்' என்பது, 'நூலே கரகம் முக்கோல் மணையே' உரியனவாகக் கொண் டிருந்த தமிழகத்தந்தணர்களாய துறவொழுக்கமே மிகுதி யாகக் கொண்டவர்கள் வழங்கிய தமிழின் பகுதியாய சொல்லாதல் வேண்டும். ஆனால், தீர்மானமாகச் சொல் வதற்கேற்றசான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை."

இதனால் வடசொல் இன்னதெனத்துணியக்கூடாவிடி னும், அது தமிழ்ச்சொல்லேயாம். சொல்லும் மொழியும் ஒரு பொருள்தரும். வடசொல்லே வடமொழியாயின், அது தமிழ் நிலத்தும், அது சார்ந்த செயற்கைமொழிகள் வழங்கும் நிலத்தும் வழங்கிவரும் பொதுமொழி யாம். அது பற்றியே அதனைத்திசைச்சொல்லின் வேறாகவைத்தனர்.

அன்றியும், சொல்லின் பொருளே சொல்தோன்றின காரணத்தை விளக்கும். வடமொழிஎன்னும் தொடர் மொழியை வடம்+மொழி: வட(க்கு)+மொழி என இரு விதமாய் பிரிக்கலாம். வடம், திரித்த கயிறு, தொடர், மாலை எனப்பொருள்படும்-கயிற்றுமொழி என்றால் பொருள் சிறக்

கவில்லை-முத்துவடம், மணிவடம்போலப்பயனுடைய சொற் கோர்வையுடைய மொழிஎன்று கொண்டால்பொருள்சிறக் கும். அன்றேல், வட வடக்குத்திசை மொழியென்று கொண்டாலும்இழுக்காது. 'வடவர் தந்தவான்கேழ்வட்டம்' (வடநாட்டிலுள்ளார் கொண்டுவந்த வெள்ளைச்சந்தனக்கல்) முதலிய பண்டைத் தமிழ்ச்செய்யுளிற் காணும் தொடர்கள் தமிழ் நாட்டின் ஒருபகுதியையே உணர்த்துதலின், வட மொழி தமிழ்நாட்டு மொழியே யாகுமன்றி, பிற நாட்டு மொழி யெனப் பொருள்படாமை உணர்க.

இன்னும்,
"முன்னிகழ்ந்த பாலி மொழியுங்கீர் வாணமும்
துன்னுங் கருப்பையிலே தோன்றுதற்கு—முன்னரே
*　　*　　*
பாராசு செய்ததமிழ்ப் பைந்தேவி"—எனவும்,

'பல்லோர் பரவப் பரவை சுலவுலகம்
எல்லாம் புரந்த இறைவியே—" எனவும்,

'புல்லர், வடமொழியி லேயிருந்து வந்ததமி ழென்பர்
மடவர் தமக்குரிமை வந்த—இடமும்

குலமும் குழுமொழியும் கொள்கையொன்று மில்லார்
அலவைச் சொலை மதிப்பா ராரே—" எனவும்,

'ஒழுக்கமைந்த, நல்லோரியற்கை செயற்கை நலனறிவார்
அல்லோர் அறிவ தரிதன்றே—" —எனவும்,

அத் '**தமிழ்விடுதூது**' முழங்குதலும் காண்க.

இனி, பிறமொழிச் சொற்களை இரவல்வாங்குவது அப் பொருள் இல்லாததினால் மாத்திரமல்ல. பொருளும் அதற் குப் பழையபெயரும் இருக்கும்போதே பிறமொழிச் சொல்லை இரவல்வாங்குவோம். அதற்குக் காரணம் பிற மொழியாளரும் பிறமொழியும் நம்மோடு நெருங்கிப்பழகு வதே-அதனால் அப்பொருளும் சொல்லும் புதியன என்பது பொருந்தாது-'வாயில்' என்பது மிகப் பழஞ்சொல். அது இருப்பவும் அது குறிக்கும் பொருளை கேட் (**gate**) என்

போம். இருமொழிக் கலவையாய் 'கேட்டு வாசல்' என் போம்: அதனால் வாயிலும் அது குறிக்கும் பொருளும் தமிழருக்குப் புதியன என்று அறிவோடு கூறுவோமா!

தொடர்மொழிகளெல்லாம் புதியன ஆகா-'வட்டப் பேய்மருட்டி', சிறுசெருப்படி: 'எழிலைத்தாமரை' என்பன போன்ற தொடர்மொழிகள் புதியன ஆகுமா? ஆகுமென்பது பொருந்தாப் புலப்பம். புதிய தொடர்மொழிகளும் இருக்கலாமே என்னில். அவைகளை எந்த அளவைகொண்டு அளந்து காண்பது? கூத்தநூல், இசைநூல், வானநூல், வில்தொழில்நூல், நிலஅளவைநூல் முதலிய பல நூல்கள் இப்போது தமிழில் காணக்கிடைக்கவில்லை. ஆகையால் தமிழர், கூத்தும், இசையும், வான்மீனுணர்ச்சியும், வில் வன்மையும், நிலமளத்தலும் முதலியன அறியார் என்பதா? அந் நூல்களெல்லாம் பொதுமொழியில் மொழிபெயர்த்தபின் ஆட்சியின்மையால் அழிந்தன அல்லது மறைந்தொளித்துக் கொண்டன என்பதா? கூர்ந்து பாருங்கள்.

'ஒரு பொருளுக்குக் காரணத்தொடர்ப்பெயராவது, புறமொழிப் பெயராவது இருந்தால், அந்தப்பொருள் முன் காலத்தில் நம் நாட்டில் இல்லை, பிற்காலத்தில் வேற்றூர் கொண்டு வந்த பொருள் என்று ஊகிக்கலாம்.' என்று நமது நண்பர் தூண்டுகிறார். ஒலிக்குறிப்புச் சொற்களை யன்றி, பிற சொற்களெல்லாம் காரணக்குறிச்சொற்களே: அவை காரணங்கருதிய வழி காரணச்சொல் எனவும், காரணம் மறந்தபோதும், கருதாதவழியும் இடுகுறிச்சொல் எனவும் பெயர் பெறும். அவை ஒரு சொல்லாகவும் தொடர்சொல் லாகவும்இருக்கும்; என்பது மொழிவரலாற்று முறையுணர்ந் தார் கண்டஉண்மை. ஆகையால் ஒரு பொருளுக்கு காரணத்தொடர்ப் பெயர் இருப்பதுகொண்டு பிறமொழி என்னல் அடாது.

'குப்பைமேனி' என்பது காரணத்தொடர்மொழி. ஆயினும் பெயரும் செடியும் புதியனவாமா? 'வட்டப்பேய் மருட்டி' காரணநெடுந்தொடர்மொழியாயினும் பெயரும் செடியும் புதியனவாமா? இச்செடிகள் பிறநாட்டிலிருந்து

வந்தனவாமா? 'கச்சேரி' பிறமொழியாயினும் அதனுற்குறிக்கப்படும்பொருள் பண்டைத்தமிழ்நாட்டிலிலதாமா' கான்ஸ்டேபிள் (Constable) பெயரும் உடையும் பிறநாட்டனவாயினும், அத்தொழின்முறை செய்தோர் பண்டைத்தமிழ்நாட்டிலிலராமா? தமிழ் நாட்டில் பண்டைக்காலமுதலே தாமே முளைத்து முளைத்தழியும் செடிகொடிகள் மீன் வகைகளுக்குத் தமிழ்ப்பெயரும் பிறமொழிப்பெயரும் இன்மையாலே, அவை தமிழ் நாட்டில் உள்ளன அல்லவா? இன்னொரு வேடிக்கையான சாட்சிகாட்டுகிறோம். உடம்பின் உள்ளுறுப்பாகிய ஸ்பிளீன் (Spleen) தமிழில் 'சுவலொட்டி' (சுவரொட்டி)என்று வழங்கும். சுவல் என்ருல் தாங்குவது, ஆதாவு, தோள் என்று பொருள். அவ்வுறுப்பிலிருந்தே உடம்பை வளர்க்கும் (கட்டும்) சாரம் உடம்பெங்கும் பரவுகிறது-இந்தக்காரணத்தொடர் சொல் பண்டைநாள் தொட்டே தமிழர் வழங்குவது. அதனைப் புதிதாகத் தமிழர் கற்பித்துக்கொண்டனர் என்று வைத்துக்கொள்வோம். அப்பெயர் புதிதாகிவிட்டதனுலே தமிழர்க்கு அவ்வுறுப்பு (Spleen சுவரொட்டி) கிடையாதென்பதோ! நமது நண்பர் கூறும் நியாமுறை மிகநன்று!

'இவ்வாறே செங்கல், சுடுமண் என்கிற காரணத்தொடர்ப்பெயரும், இட்டிகை (இஷ்டிகா) என்ற புறமொழிப் பெயரும் தமிழில் இருப்பதாலும், இந்தப் பொருளுக்கு இந்தப் பெயரைத்தவிர இடுகுறி காரணக்குறிப்பெயர்களில்லாததாலும், முற்காலத்தில் தமிழர் செங்கல்லை வழங்கவில்லையென்றும், வடமொழி பேசுவோருடன் பழகிய பின்புதான் இப்பொருளை உபயோகிக்க ஆரம்பித்தார்களென்றும் ஊகிக்கலாம்' என்கிறுர். செங்கல், பச்சை வெட்டுக்கல், சுட்டகல் என்று கேட்டிருக்கிறோம்- சுடுமண் கேட்டதில்லை- செங்கல் அறுக்குங் கருவிக்குக் 'கட்டளை' யென்றும் அதில் களிமண்ணையிட்டு அறுத்தபின் அதற்கு இட்டிகை யென்றும், அது செந்நிற முடைமையின் 'செங்கல்' என்றும் அது கல்லென் றெலித்தலின் கல் என்றும் தமிழர் கூறினர். அதனை வடமொழியாளர் 'இஷ்டிகா' என்றனர். தமிழ்ச்

சொற்களின் ஈற்றிலுள்ள ஐகாரத்தை ஆகாரமாக்கலும் (மாலையை 'மாலா' வென்றும், கலையைக் 'கலா' வென்றும் கூறுமாறு போல); இடையிலுள்ள டகாரத்தோடு (ஊஷ்மா) ஆய்த உயிர்ப்பொலிசேர்த்தலும் (கட்டம் கஷ்டம்; பிட்[illegible] பரிஷ்டம் என்றாற்போல); சம்ஸ்கிருதக் காரர் விதிமுறை. அதனால் 'இட்டிகை' 'இஷ்டிகா' ஆயிற்று. இந்த 'இஷ்டிகா' என்னும் சொல்லுக்குப் பொருள் என்னவோ? தெய்வத்துக்குத்தான் வெளிச்சம்! அதனை நமது நண்பர் கூறினாரல்லர்- மக்கள், முதலில் 'மண்' (ஒலிக்குறிப்பு இடுகுறிச்சொல்) கண்டு, களிப்புடைமையால் 'களிமண்' (காரணக் குறித்தொடர் சொல்) என்று, பின் அதனை வனைந்து 'களிமண்கலம், மண்கலம்' எனப்பேரிட்டு, அதுசுட்டபின் உறுதி பெறுதல் கண்டு சுடத்தொடங்கினர். அதுபோல் களிப்புமண்ணைக் கட்டளையிலிட்டறுத்து 'இட்டிகை' என்று கூறி, அதனைச் சுட்டு,கல்போல்உறுதிபெற்றிருந்ததால் 'செங்கல்'என்றனர். இதற்கெல்லாம் காலவரையறை கூறவியையுமா? 'இட்டிகை' என்னும் தமிழ்ச்சொல்லையே 'இஷ்டிகா' என்றுகெடுத்து வைத்துக்கொண்டு அது வடமொழிச் சொல்லென்றும், வடமொழியாளருடன்பழகிய பின்னரே தமிழர் பச்சை வெட்டுக் கல்லைச்சுடத்தொடங்கினரென்றும், வழக்காடுவது என்ன நெஞ்சழுத்தம்! "கட்டளை கோடித் திரியிற் கருதிய, இட்டிகையுங்கோடும்" என்னும் ஆன்றோர் வாக்கையும் உன்னிப் பாருங்கள். ஆரிய (அந்தர— ஆகாய) நாட்டில் செங்கற் கட்டடங்கள் இருந்தனபோலும்!

ஒருக்கால், நாம்நமது நண்பரை நேரிட்டு, 'செங்கல் போல இட்டிகையும் இடு என்னும் தமிழ்ச் சொற்பகுதி பெற்ற தமிழ்ச்சொல்தானே' என்க, அவர் 'அப்போதும் அது காரணத்தொடர்சொல்தானே' என்றனர். நாம், 'ஒரு மொழியில் எல்லாச்சொல்லும் இடுகுறிச்சொல்லாயிருத்தல் இயையுமா? ஒலிக்குறிப்புச்சொல் அல்லனவெல்லாம் காரணக்குறிச் சொல்கள் தாமே? காரணக் குறிச்சொல்லெல்லாம் ஒரு சொல்லாகவும், தொடர் சொல்லாகவுந்தாமே இருக்கும் 'என்றேம். அதற்கவர்' உம்முடைய இலக்கணத்

தில் அப்படி இருக்கும்' என்றார். 'ஆனால், தமிழ்மொழியில் உள்ள இலக்கணநூல்களையெல்லாம் ஆராய்ந்திருப்பீர்களே அவைகளில் இப்படித்தான் சொல்லுகிறதோ?, என்றேற்கு அவர் 'எனக்குத் தமிழ்தெரியாது. நான் படித்தது சமஸ் கிருதமும் ஆங்கிலமும்' என்று சொல்லிப்போயினர். தமிழ் படிக்காமலே தனித் தமிழ்ச்சொற்களை ஆராய்கின்றார். அவ் வாராய்ச்சி பயன் மிகவுந்தரும்!

இன்னும், 'இந்த ஊகம் சரியான ஊகமே. ஏனெனில் தென்னிந்தியாவில் பழையகாலத்தில் கட்டடங்களெல்லாம் மண்ணாலும், மரத்தாலும கட்டினார்களாகையால் செங்கலைச் சுட்டுவழங்கத் தேவையில்லாததால் செங்கல் அப் போது கிடையாது. அதனால் அதற்கு இடுகுறிப்பெயர் கிடையாது. காரணக்குறிப்பெயரும் கிடையாது?' என் கிறார்-அதாவது 'அதோ நிற்கிறார்கள் உன்மக்கள். உனக்கு மக்களில்லை-என்மக்களே' என்கிறார். இன்னும் இதனை விரிக்கவேண்டுவதில்லை. இப்போது புதுக்கிக்கட்டப்பட்ட திருவானைக்காக் கோவில் சோழன் செங்கண்ணான் காலமுத லே ஒரே நிலையிலிருக்கின்றது என்றுகூறி வல்லடி வழக்கிடு வார்க்கு நமது நண்பரும், அவர் பெயரன்மாரும் யாது கூறுவரோ? அறியாம்.

எல்லாமுறைகளிலும் சிறந்தோராக நமது நண்பர் கருதுகிற ஆரியர் யாவர்? 'மிலேச்சர் ஆரியர்' என்று சேந் தன் திவாகாரம் கூறுகிறது, மிலைதல் என்றால் கட்டுதல். மிலேச்சர் என்றால் கட்டுப்பட்டவர், அடிமைகள் என்பது பொருள், சங்கஇலக்கியங்களில் ஆரியர் என்று சிலர் இருந் தனரென்றும், அவர்மிலேச்சரென்றும், யானை குதிரை மேய்ப் பது அவர்கள் தொழிலென்றும், அவர்கள் 'கல்லாவிளையர்' என்றும், அரண்மனைகளில் தொழும்பு செய்தனரென்றும் கூறுதல் காணலாம். அவர்கள் அடிமைகளாய் தமிழ்நாட் டிற்குரிமையில்லா ராதலால், நிலவுரிமையுடைய தமிழ்க் குடியானவர்களோடு சமமாகக் கருதப்படவில்லை. ஆதலால், அவர்கள் பிணங்களைச் சமாதிசெய்ய இடம் பெறாமல் தாங் களே சுட்டுச்சசாம்பராக்கி ஆற்றிற்கரைத்தனர், (அவ்வாறே

இக்காலத்தும் ஆரியரென்று கூறிக்கொள்ளும்பிராமணர்களும் செய்கின்றனர்), இவ்வாறு கீழ்நிலையிலிருந்த ஆரியர் எவ்வாறு மேனிலையராயினர் என்பதை ஆராய்தற்கிது இடமன்று ஆதலின் விடுகின்றோம்.

இத்துணையுங்கூறியவாற்றால், நமது நண்பர் தமிழரின் சிறப்புக்கூறத் தொடங்கினதெல்லாம், (இராமாயணத்தில் இராவணனது வலிமையையும் கொடுமையையும் உயர்த்தி உயர்த்திக்கூறியதெல்லாம் இராமபிரானது சிறப்புக்காட்டுவதற்கானவாறுபோல) ஆரியத்தின், ஆரியரின் சிறப்புக் கூறுவதற்கே என்பது தெளிவாகும்.

முடிவுரை.

தமிழீர்!

நமதுநண்பர் கட்டப்புகுந்தகோட்டைக்கு அடிப்படை இன்மை (சூனியம்) யை உணருங்கள். அவரோ தமிழ்நாட்டு அந்தணர்மரபில் வந்தவர். ஆரியரல்லர்-எனினும், தமிழ்க்கும் தமிழர்க்கும் உரிய உயர்வை உள்ளபடி எடுத்துக்காட்டி மேம்படச்செய்யக் கருதாமல், ஆரியத்துக்கும் ஆரியர்க்கும் உரிமையல்லாத பெருமைகளைக் கற்பித்துரைக்கின்றார்-இந்தத் தகுதியில் முறைக்குத்துணைசெய்யப் புலவர்களையும் கூப்பிடுகிறார். வேலியே பயிரைத்தின்றால் வேலியேன்?

"நிறையினால் நல்லார் தமைக்காத்து நிற்பர்
சிறைகாத்த லென்னபயன் செய்யும்—நிறைசெல்வன்
தன்பொருட்குத் தான்கள்வனாவனேல் காவலேன்
பொன்பொருவு நல்லாய் புகல்" (பெண்மைநெறிவிளக்கம்)

என்று தமிழன்னைக்கே முறையிடுகின்றோம்.

"எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்".

திருக்குறள்.

சித்தாமிர்தம். Or Water of Life.

இது நெடுநாள் உடற்கூறுகளையும், நோய்உண்டாகும் வழிகளையும் ஆராய்ந்து செய்த கைகண்டமருந்து. இதற்கிணையானது இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இது நரம்பைப்பற்றிய ஒழுங்கீனங்களையும், அவற்றால் வரும் உயிர்நாடிகளின் வலுக்குறைவு, களைப்பு, வீரிய நெகிழ்ச்சி, இயற்கைக்கு விரோதமான வீரியப்போக்கு, ஆண்மைத் தளர்ச்சி, மறதி, மூளைக்கலக்கம், வீரியக்குறைவு, வீரியமின்மை, நீரிழிவு, ஊக்கமின்மை, பார்வை மந்தம், மண்டைக் கிறுகிறுப்பு, உன்மத்தம், தீக்கனவு, மலக்கழிவில் விந்துச்சேதம், தொழில்செய்ய விருப்பமின்மை, தலைநோய், தசைநார்த்தளர்ச்சி, படபடப்பு, முகப்பரு, செரியாமை, மலக்கட்டு, இரத்தக்குறைவு மனஅயர்ச்சி, இளமையிலே வீரியமிழத்தல், வாழ்க்கையிலும் இன்பமனுபவித்தலிலும் விருப்பமின்மை, கல்வியில் கருத்தின்மை, குண்டிக்காய் நீர்ப்பைகளைப்பற்றின துன்பங்கள் முதலிய பல பிணிகளையும் போக்கும்.

சித்தாமிர்தம். நோயாளியின் உடம்பில்நோய்கண்ட உறுப்புக்களிலுள்ள கொடிய துன்பங்களை உடனே போக்கி, அக்கருவிகளுக்கு இயற்கையான வலிமையைக்கொடுத்து, முழுசுகத்தையும், வன்மையையும், ஊக்கத்தையும், மனக்களிப்பையும் தந்து, நல்வாழ்வு வாழச்செய்யும்.——

புட்டி ஒன்றின் விலை—ரூ. 2—மாத்திரமே,

ஒரு புட்டி, நாற்பது நாள் மருந்து உயிர் வழ்வோம் என்னும் நம்பிக்கையில்லாத நோயாளியையும் குணப்படுத்திவிடும். திரிசிரபுரம், உறையூர், நித்தியானந்த சித்த மருந்தகம் என்னும் விலாசத்துக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.